சிசி **232/2018.** அசா**.2** செந்தில் கணேசன்**,**த**.**பெ கருப்பையன் **,** தேதி **07.07.2023**

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

விபத்து நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடைய சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன பாலமுருகன், பிரகாஷ் என்பவரை எனக்கு சம்பவத்திற்கு முன்பு தெரியாது. சம்பவ சமயத்தில் எங்களுக்கு முன்பாக சுமார் அரை கி.மீ தொலைவில் விபத்தில் இறந்துபோனவர்களின் இருசக்கர வாகனம் சென்றது என்றால், சுமார் 150,200 அடி துாரத்தில் தான் சென்றது. விபத்து நடந்த வாகனத்திற்கும் எங்கள் வாகனத்திற்கும் இடையே வேறு ஏதேனும் வாகனம் சென்றதா என்றால் இல்லை. விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தினை யார் ஓட்டி சென்றார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் விபத்திற்கு பிறகு பிரகாஷ் என்பவர் ஓட்டிசென்றதாக தெரியவந்தது.

நான் முதல் விசாரணையில் சொன்னது போல் விபத்திற்கு டாடா இன்டிகா விஸ்டா வாகனம் காரணமில்லை என்றாலும், விபத்தில் இறந்துபோன பாலமுருகன், பிரகாஷ் ஆகியோர் அவர்களது இருசக்கர வாகனத்தினை அதிகவேகமகாவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்றதாலேயே விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. விபத்தில் இறந்துபோன பாலமுருகன் , பிரகாஷ் ஆகியோர் எனக்கு பக்கத்து ஊர்காரர்கள் என்பதால் அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து தொடர்பாக போலீசார் என்னை ஊரில் வந்து விசாரித்தார்கள்.

விபத்தில் இறந்து போனவர்கள் சம்பவ சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தார்களா என்றால் அதனை நான் பார்க்கவில்லை.